செ.வெ.எண்-11 நாள்-04.09.2021

# அரியலூர் மாவட்டம்

# தேசிய ஊட்டச்சத்து விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவைக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் ஊட்டசத்து உணவுகளின் அவசியம் குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (04.09.2021) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் ஊட்டச்சத்து மாதமாக செப்டம்பர் 1 முதல் 30 வரை கொண்டாடப்பட்டு வருகிறது. மாவட்டத்திலுள்ள 6 வட்டாரங்களில் ஊட்டச்சத்து உணவுகள் குறித்து விழிப்புணர்வு பேரணி, கோலப்போட்டி, ஊட்டச்சத்து உணவுகள் குறித்த விழிப்புணர்வு அரங்குகள் அமைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படா வண்ணம் குழந்தையின் முதல் 1000 நாட்களின் முக்கியத்துவத்தை உணர்த்துதல், இரத்த சோவை இல்லாமல் செய்தல், வயிற்றுப்போக்கு தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல், சுத்தமாக கைக்கழுவும் பழக்கம் மற்றும் சுகாதாரம் பேணுதல், ஊட்டச்சத்து உள்ள உணவுகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்து ஊட்டச்சத்து குறைபாடு இல்லா மாவட்டமாக உருவாக்க வேண்டும்.

இதனை கருத்தில் கொண்டு, இன்று (04.09.2021) அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகளிர் சுயஉதவிக்குழுகளின் உறுப்பினர்களைக் கொண்டு ஊட்டச்சத்து விழிப்புணர்வு பேரணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இவர்கள் தாங்கள் பகுதிகளிலுள்ள பொதுமக்களிடம் ஊட்டச்சத்து உணவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவார்கள். இப்பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து சுமார் 100 அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு அரியலூர் முக்கிய வீதிகள் வழியாக சென்று அரியலூர் பேருந்து நிலையத்தில் முடிவடைகிறது.

முன்னதாக, ஊட்டச்சத்து உணவுகளின் அவசியம் குறித்த உறுதிமொழியினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வாசிக்க, அனைத்து அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் (மகளிர்திட்டம்) திரு.எம்.சிவக்குமார், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.அன்பரசி, திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம்) திருமதி.எம்.சாவித்திரி மற்றும் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**